சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.
வழக்கு எண் :OS:128/2017

2022ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 31ம் நாள் பிரதிவாதி சாட்சியின் வாக்குமூலம் (1889ம் ஆண்டு சாட்சியச் சட்டம் எண். 44வது பிரிவு 5வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.எம்.ரைஹானா பேகம் கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் கிருஷ்ணன் (DW1) | தொழில் |
| தந்தை/கணவர் பெயர் | சமயம் |
| கிராமம் | சாதி |
| தாலுகா | வயது |

**முதல் விசாரணை**

31.10.2022

நான் இந்த வழக்கின் பிரதிவாதி தரப்பு 1வது சாட்சி. என்னுடைய சாட்சியத்தை பிரமாணவாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். இதைப்படித்து பார்த்து கையெழுத்து செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். பெரியகருப்பன் தன் மக்களான 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கு எழுதிவைத்த உயில் அசல் பி.வா.சா.ஆ.1 ஆகும். ஆவியூர் ஊராட்சி மன்றத்தலைவர் 2ம் பிரதிவாதிக்கு வீடு கட்டுவதற்கு கொடுத்த அனுமதி கடிதம் அசல் பி.வா.சா.ஆ.2 ஆகும். தாவா 3வது லக்க சொத்தில் உள்ள கட்டிட வரைபடம் அசல் பி.வா.சா.ஆ.3 ஆகும். 2ம் பிரதிவாதி பெயரில் உள்ள வீட்டுவரி ரசீதுகள் (எண்ணம்–7) அசல் பி.வா.சா.ஆ.4 ஆகும். 3ம் பிரதிவாதி பெயரில் உள்ள வீட்டுவரி ரசீதுகள் (எண்ணம்–5) அசல் பி.வா.சா.ஆ.5 ஆகும். 4ம் பிரதிவாதி பெயரில் உள்ள வீட்டுவரி ரசீதுகள் (எண்ணம்–2) அசல் பி.வா.சா.ஆ.6 ஆகும். 2ம் பிரதிவாதி பெயரில் உள்ள மின்கட்டண ரசீதுகள் (எண்ணம்–10) அசல் பி.வா.சா.ஆ.7 ஆகும். 3ம் பிரதிவாதி பெயரில் உள்ள

மின்கட்டண ரசீதுகள் (எண்ணம்−7) அசல் பி.வா.சா.ஆ.8 ஆகும். 4 ம் பிரதிவாதி பெயரில் உள்ள மின்கட்டண ரசீதுகள் (எண்ணம்−3) அசல் பி.வா.சா.ஆ.9 ஆகும். பிராதை தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்.

குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.